## தமிழ்மொழிக்கும், திராவிடத்திற்கும் எதிராக கடந்த காலங்களில் தொடர்ந்து

# ஆளுநர் அவர்களே; நீங்கள் பேசியது நினைவிருக்கிறதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு ஆளுநருக்கு அடுக்கடுக்கான கேள்விகள்!

**சென்னை,அக்.20-**

**தமிழ்மொழிக்கும் திராவிடத்திற்கும் எதிராக கடந்த காலங்களில் தொடர்ந்து ஆளுநர் அவர்களே; நீங்கள் பேசியது நினை விருக்கிறதா? என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு ஆளுநருக்கு அடுக்கடுக்கான கேள்விகள் எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சமூக வலைத்தள பதிவு தொடர்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

இந்தி மாதக் கொண்டாட்ட நிறைவு விழாவில் பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்தில், 'தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்' என்ற வரியைப் பாடாமல் விட்டதற்கு, எனது கடும் கண்டனத்திற்குப் பதிலளித்துள்ள ஆளுநருக்குச் சில கேள்விகள்:

'தமிழ்த்தாய் வாழ்த்தை முழுமையாக பக்திச்சிரத்தையோடு பாடுவேன்' எனச் சொல்லும் நீங்கள், முழுமையாகப் பாடப்படாத தமிழ்த்தாய் வாழ்த்தை உடனே மேடையிலேயே கண்டித்திருக்க வேண்டாமா? அதனை ஏன் செய்யவில்லை?

**சரியாக தமிழ்த்தாய் வாழ்த்தை பாடும்படி செய்திருக்கலாமே?**

'பெருமையோடு துல்லியமாகப் பாடுவேன்' என விளக்கம் கொடுக்கும் ஆளுநர் – உரிமையோடு அந்த இடத்திலேயே தவறைச் சுட்டிக் காட்டியிருக்கலாமே! சரியாகப் பாடும்படி பணித்திருக்கலாமே? துல்லியமாக அந்தச் செயலை நீங்கள் செய்திருந்தால் எதிர்வினை ஏற்பட்டிருக்குமா?

'ஒரு ஆளுநருக்கு எதிராக முதலமைச்சர் இனவாதக் கருத்தைத் தவறான குற்றச்சாட்டுகளுடன் முன்வைப்பது துரதிருஷ்டவசமாக மலிவானது' எனச் சொல்லியிருக்கிறீர்கள்.

ஆளுநர் அவர்களே, தமிழ் எங்கள் இனம். அது எங்கள் உயிர்மூச்சு. தமிழ்மொழியைக் காக்க உயிர்களை நெருப்புக்குக் கொடுத்தவர்கள் தமிழர்கள். முதல் அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்திற்கு அடிகோலியதோடு, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தின் வரலாறுகளைத் தாங்கி நிற்கும் மண் இது. இந்த மண்ணின் தாய்மொழிப் பற்றினை இனவாதம் என்றால் அது எங்களுக்குப் பெருமைதான்!

> **“ஆளுநர் அவர்களே, தமிழ் எங்கள் இனம். அது எங்கள் உயிர்மூச்சு. தமிழ்மொழியைக் காக்க உயிர்களை நெருப்புக்குக் கொடுத்தவர்கள் தமிழர்கள். முதல் அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்திற்கு அடிகோலியதோடு, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தின் வரலாறுகளைத் தாங்கி நிற்கும் மண் இது. இந்த மண்ணின் தாய்மொழிப் பற்றினை இனவாதம் என்றால் அது எங்களுக்குப் பெருமைதான்!”**



**தமிழ்மொழிக்கு மோடியின் ஒன்றிய அரசு என்ன செய்தது?**

'பாஜக அரசு பல்வேறு அமைப்புகளை நிறுவித் தமிழ்மொழி மற்றும் அதன் பாரம்பரியத்தைத் தமிழ்நாடு உள்பட இந்தியாவுக்கு உள்ளேயும் உலகின் பல நாடுகளிலும் பரப்புகிறது. ஐக்கிய நாடுகள் சபைக்கும் கூட தமிழைக் கொண்டு சென்றார் பிரதமர் மோடி' எனச் சொல்லியிருக்கிறார் ஆளுநர். தமிழைத் தலையில் தூக்கிப் போற்றுவதாக நீங்கள் கூறும் மோடி அரசு தமிழ்மொழிக்கு என்ன செய்தது? 2013-2014 முதல் 2022 -2023-ஆம் ஆண்டு வரை சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்காக டெல்லியில் உள்ள மத்திய சமஸ்கிருதப் பல்கலைக்கழகத்துக்கு ரூ.2029 கோடி, திருப்பதியில் உள்ள தேசிய சம்ஸ்கிருதப் பல்கலைக்கழகத்துக்கு ரூ.406 கோடி என மொத்தம் ரூ.2435 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு செலவிடப்பட்டதைவிட இரண்டரை மடங்கு அதிகம். இதே காலகட்டத்தில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக வெறும் ரூ.167 கோடி மட்டுமே செலவிடப்பட்டது. அதாவது சமஸ்கிருதத்திற்குச் செலவிடப்பட்டதில் வெறும் 7 விழுக்காடு மட்டுமே தமிழுக்கு ஒதுக்கப்பட்டது.

அதுமட்டுமில்ல, கடந்த காலத்தில் நீங்கள் பேசியது நினைவிருக்கிறதா?

"தமிழ்நாடு என்ற பெயரைப் புறக்கணித்து, தமிழகம் என்று அழைக்க வேண்டும்" என்றும்; "திராவிடம் என்ற கோட்பாடே பிரிட்டிஷார் அறிமுகப்படுத்தியதுதான்" என்றும் கூறியதை மறக்க முடியுமா?

**ஆளுநரின் தமிழ் வெறுப்பு தமிழ்த்தாய் வாழ்த்து வரை வந்து நிற்கிறது!**

'திராவிட மாடல் காலாவதியான கொள்கை' என ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி அளித்த வெறுப்புதானே, இன்றைக்குத் தமிழ்த்தாய் வாழ்த்து வரை வந்து நிற்கிறது?

தமிழை நேசிப்பதாக இப்போது சொல்லும் நீங்கள் முன்பு, திருவள்ளுவர் படத்தைக் காவி நிறத்தில் ஏன் வெளியிட்டீர்கள்? எனச் சொல்ல முடியுமா?

தமிழ்மீது ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குப் பற்றிருப்பது உண்மையானால், உலகப் பொதுமறையான திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்காமல் உங்களைத் தடுப்பது எது?

பிரதமர் மோடி அவர்கள் அறிமுகப்படுத்தும் திட்டங்கள், தொடர்வண்டிகள், முன்வைக்கும் முழக்கங்கள் என 'எங்கும் இந்தி – எதிலும் இந்தி' என்ற கொள்கையுடன் இந்தியைத் திணிப்பது நீங்கள்தான்.

**ஆளுநராகப் பொறுப்பேற்றதிலிருந்து அரசியல்சட்ட நெறிமுறைகளை மறந்து நாள்தோறும் அரசியல் பேசுவதும், ஆளுநர் மாளிகையை அரசியல் அலுவலகமாக மாற்றியதும் – திராவிட இனத்தையே கொச்சைப்படுத்திப் பேசி வருவதும் எந்த வகை அரசியல் நாகரிகம்? எந்த வகை கண்ணியம்?**

**சட்டப்பேரவையில் நீங்கள் படிக்க வேண்டிய ஆளுநர் உரையில் கூட திராவிட மாடல், தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற பெயர்களைத் தவிர்த்தவர்தானே நீங்கள்?**

உங்கள் வரலாறு இப்படி இருக்கும்போது, திராவிடநல்திருநாடு தவிர்க்கப்பட்டதைத் தற்செயலானது எனத் தமிழர்கள் எப்படி நம்புவார்கள்?

**விஷக்கருத்துகளை விதைக்க நினைத்தால் வேரில் வெந்நீரை ஊற்றுவர் தமிழர்!**

அரசியலமைப்புச் சட்டப் பதவியில் சட்டப் புத்தகத்தின்படி பொறுப்பேற்றவர், வகுப்புவாதக் கும்பலின் கைப்பாவையாக மாறி, பிளவுவாத அழிவு விஷக் கருத்துகளைத் தமிழ்மண்ணில் விதைக்க நினைத்தால் அதன் வேரில் வெந்நீர் ஊற்றுவார்கள் தமிழ்நாட்டு மக்கள்.

நீங்கள் ஆளுநர் பதவியில் தொடர நினைத்தால், பிளவுவாத சக்திகளிடமிருந்து விடுவித்துக்கொண்டு, அரசியல்சட்ட நெறிமுறைகளின்படி கடமையை ஆற்ற வேண்டும் என உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# ஆளுநர் ரவிக்கு கட்சித் தலைவர்கள் கண்டனம்...!

## முதல் பக்கத் தொடர்ச்சி

இந்நிலையில், இந்தி மாத கொண்டாட்டத்தின் நிறைவு நாள் நிகழ்ச்சி சென்னை தொலைக்காட்சி அலுவலகத்தில் நடைபெற்ற போது, விழா தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து பாடியவர்கள் திட்டமிட்டு தவிர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு திராவிட நல் திருநாடு என்ற வார்த்தையை விட்டு விட்டு பாடியிருக்கிறார்கள். இப்படி செய்வதன் மூலமாக தமிழக ஆளுநரை திருப்திப்படுத்தலாம் என்ற நோக்கத்தில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் இதை செய்திருப்பதாக தெரிகிறது. இந்த நடவடிக்கை மிகுந்த கண்டனத்திற்குரியது. இத்தகைய போக்கை எவருமே சகித்துக் கொள்ள மாட்டார்கள்.

ஆளுநர் ஆர்.என். ரவி தொடர்ந்து பேசும் போது 'தமிழ்நாட்டு மக்கள் இந்தியை விரும்பி படிக்கிறார்கள்.

இந்தியை எவரும் எதிர்க்கவில்லை" என்று பேசியதோடு, சமஸ்கிருத மொழிக்கு வக்காலத்து வாங்கியிருக்கிறார். அரசமைப்புச் சட்டத்தில், உறுப்பு 343 இல் இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி மொழி இருப்பதோடு, ஆங்கிலமும் துணை ஆட்சி மொழியாகவும், மாற்று மொழியாகவும் இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை தொடர்ந்து இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. பிரதமர் ஜவஹர்லால் நேரு 1963 இல் வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையில் ஆட்சி மொழிகள் சட்டம் – 1967 இல் திருத்தம் செய்யப்பட்டு சட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஒருமொழி மற்ற மொழியை விட தேசியமானது என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசமைப்புச் சட்டம் 8-வது அட்டவணையில் கூறப்பட்டுள்ள 14 மொழிகளுமே தேசிய மொழிகளாகும்.

இந்நிலையில், இந்தி மொழியை பரப்புவதற்காக இந்தி பேசாத மக்கள் வாழ்கிற தமிழகத்தில் நடத்தப்பட்ட ஒன்றிய அரசு நிகழ்ச்சியில் இந்தி மொழியை மட்டும் பரப்புகிற நிகழ்ச்சி நடத்துவதும், இந்தியை தமிழக மக்கள் படிக்க வேண்டுமென்று ஆளுநர் பேசுவதும் வன்மையான கண்டனத்திற்குரியது.

மேலும், 50 ஆண்டுகளாக தமிழ்நாட்டை இந்தியாவிலிருந்து பிரிக்க முயற்சி நடக்கிறது என்று ஒரு ஆளுநரே பேசுவது தமிழக மக்களை இழிவுபடுத்துகிற செயலாகும். இத்தகைய பேச்சுகளின் மூலம் தமிழக மக்கள் ஏற்றுக் கொண்ட தேசிய ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும் சீர்குலைக்கிற முயற்சியில் ஆளுநரே ஈடுபடுவது எவராலும் சகித்துக் கொள்ள முடியாது. தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு விரோதமான இத்தகைய பேச்சுகளை தமிழக ஆளுநர் உடனே நிறுத்த வேண்டும். அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக செயல்படுகிற தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டுமென தமிழக முதலமைச்சர் விடுத்துள்ள கோரிக்கையை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக நான் வழிமொழிந்து வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு கு.செல்வப்பெருந்தகை கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**ம.தி.மு.க.**
**வைகோ**

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை வருமாறு:-

2024 அக்டோபர் 18 ஆம் நாள் துரோகம் இழைக்கப்பட்ட நாளாக தமிழக ஆளுநர் உருவாக்கி இருக்கிறார். இந்தியை எதிர்த்து இலட்சக்கணக்கானவர்கள் உயிர்த் தியாகமும், இரத்தமும் சிந்தியிருக்கிறார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் வரை எண்ணற்ற தலைவர்கள். ஆண்டுக் கணக்கில் சிறைச்சாலைகளில் இருந்திருக்கிறார்கள்.

தலைவர்கள் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான தோழர்கள், இளைஞர்கள், இலட்சக்கணக்கான மாணவர்கள் 1965 மொழிப்போரில் செந்தமிழைக் காப்பதற்காகவும், இந்தியை நுழைய விடக் கூடாது என்பதற்காகவும் உறுதி எடுத்துக் கொண்டு போராடினார்கள்.

அரசியல் சட்டத்தின் 17 ஆவது அத்தியாயத்திற்கு நெருப்பு வைக்கச் சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் டாக்டர் கலைஞர் உள்பட பலரும் சிறைவாசம் ஏற்றார்கள். அரசியல் சட்டத்தைத் தீ வைத்துக் கொளுத்தியதற்காக சிறையில் பூட்டப்பட்டார்கள்.

அண்ணா அவர்கள் முதலமைச்சரானவுடன், சட்டமன்றத்தில் மசோதா கொண்டுவந்து தமிழ்நாட்டில் தமிழும், ஆங்கிலம் மட்டும்தான். இந்திக்கு இங்கே இடமில்லை என்று அறிவித்து பிரகடனம் செய்தபோது, ஒரு சட்டமன்ற உறுப்பினர்கூட எதிர்த்துக் குரல் கொடுக்கவில்லை. ஒருமனதாக அந்த மசோதா சட்டமாக நிறைவேறிற்று.

அண்ணா அவர்கள் தான் மறைவதற்கு முன்பு கடைசியாக தமிழ்நாடு பெயர் சூட்டுவிழாவில் பேசும்போது, தமிழ்நாட்டில் தமிழும், ஆங்கிலமும்தான் ஆட்சி மொழிகளாக இருக்கும். இந்தி இருக்காது என்ற சட்டத்தை வருங்காலத்தில் யார் வந்தாலும் மாற்ற முடியாது என்பதை மனம் திறந்து தமிழ் மக்களுக்குத் தெரிவித்தார்.

1965 மொழிப்புரட்சி போராட்டத்தின் போது இந்திய இராணுவத்தை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தார்கள். எல்லைப் பகுதிகளைக் காக்க வேண்டிய இந்திய இராணுவம், தமிழகத்துக்குள் நுழைந்து மாணவர்களையும், இந்தி எதிர்ப்பாளர்களையும் சுட்டுக் கொன்றது. ஆயிரக் கணக்கானவர்கள் சிறை சென்றார்கள். மொழிப் புரட்சியைப் போன்ற ஒரு போராட்டம் இந்திய வரலாற்றில் வேறெங்கும் நடந்தது இல்லை.

இப்படிப்பட்ட போராட்டங்களை நடத்தியிருக்கக்கூடிய தமிழ்நாட்டில் இன்றைக்கு இந்தியைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக இந்தியின் 50 ஆவது ஆண்டு பொன்விழா என்று தூர்தர்ஷன் அலுவலகத்தில் அகந்தையும், ஆணவமும், தான்தோன்றித்தனமும் கொண்டிருக்கக்கூடிய தமிழக ஆளுநர் இரவி பேசியது மட்டுமல்ல, மனோன்மணியம் சுந்தரம்பிள்ளைஇயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்து தமிழகமெங்கும் பாடப்பட்டு வருகிறது. அதில் வரும் திராவிட நல் திருநாடு என்ற சொற்களை நீக்கிவிட்டு பாட வைத்திருக்கிறார்.

நான் ஆளுநரைக் குற்றம் சாட்டுகிறேன். அப்படி என்றால், இந்திய தேசிய கீதத்தில் இருக்கக்கூடிய திராவிட உத்கல வங்கா என்பதில் உள்ள திராவிடத்தை எடுக்கச் சொல்வீர்களா? ஒரு வேளை அதற்கு இதில் ஒத்திகை பார்க்கின்றீர்களா? நீங்கள் இந்த வார்த்தைகளை அகற்றச் சொன்னதற்கு மன்னிப்பே கிடையாது. இருந்தாலும் நீங்கள் பகிரங்கமாக தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

ஒன்றிய அரசுக்கும், பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும் சொல்வேன், தமிழகத்தை பாழ்படுத்த நினைத்து திராவிட இயக்கத்தை வீழ்த்துவோம் என்று தமிழகத்தில் நெருப்பு உணர்வை விதைத்திருக்கக் கூடிய ஆளுநர் ஆர்.என்.இரவியை நீங்கள் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும். அவர் தமிழக மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும்.

கன்னம் கிழிபட நேரும்; வந்த கட்டாய இந்தியை வெட்டிப் புதைப்போம் என்ற புரட்சிக் கவிஞரின் கவிதையைப் பாடிக் கொண்டு தமிழக வீதிகளில் இலட்சக்கணக்கான மாணவர்களும், இளைஞர்களும் திரண்டு போராடினார்கள். ஆக, இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்பது எங்கள் இரத்தத்தோடு, எங்கள் உணர்வோடு கலந்தது. நானும் அரசியல் சட்டத்தை எரித்திருக்கிறேன்; சிறை சென்றிருக்கிறேன். சட்டத்தை எரித்ததற்காக அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களை நீக்கினார்கள். அதற்குப் பின்னரும் டாக்டர் கலைஞர் அவர்கள் அரசியல் சட்டத்தைக் கொளுத்துகின்ற போராட்டத்தில் தோழர்களோடு கலந்து கொண்டு அவரும் சிறை சென்றார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிறைக் கூடத்தில் கம்பிகளுக்குள் இருப்பதைப் போல சிறை உடையைக் கொடுத்து உள்ளே பூட்டி வைத்தார்கள். பிறகு என்ன ஆயிற்று? கலைஞரே மீண்டும் முதலமைச்சரானார்.

தமிழகம் அருமைத் தாய்த் தமிழை நெஞ்சார போற்றி வணங்குகின்ற பூமி. இந்தியை எதிர்த்து தங்கள் ஆவியைத் துறந்த சிவலிங்கம், சின்னச்சாமி, அரங்கநாதன், ஆசிரியர் வீரப்பன், விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, சத்தியமங்கலம் முத்து, பீளமேடு தண்டபாணி, மாயவரம் சாரங்கபாணி தங்கள் உயிர்களைக் கொடுத்து தாங்களாகவே மரணத்தைத் தழுவிய தியாக வரலாற்றுக்கு உரிய மண் தமிழ்நாடு.

எனவே, இந்த அநீதியான காரியத்தைச் செய்த ஆளுநருக்கு மன்னிப்பே கிடையாது. அவரை உடனே டெல்லிக்கு அழைத்துக்கொள்ளுங்கள். இந்திய ஒருமைப்பாட்டுக்கு வேட்டு வைப்பதற்காகத்தான் இந்தக் காரியத்தில் இறங்கியிருக்கிறார் அவர் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**இந்தியக் கம்யூனிஸ்ட்**
**இரா.முத்தரசன்**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள கண்டன அறிக்கை வருமாறு -:-

தமிழ் மொழியை விஷம் எனக் கூறிய ஆளுநர் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்

நேற்று (18.10.2024 ) சென்னையில் நடைபெற்ற விழா ஒன்றில் ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி தமிழ் மொழியை 'விஷம்' என்று கூறி இழிவு படுத்தியுள்ளார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தொன்மை மரபுகளில் நின்று, தனித்துவம் வாய்ந்த பண்புகளை வளர்த்து, சமூகநீதி ஜனநாயகம் பேணுவதில் பிற மாநிலங்களுக்கு வழி காட்டி வரும் தமிழ்நாட்டையும், மக்களையும் ஆளுநர் அவமதித்துள்ளார். ஆர்.என்.ரவி ஆளுநர் பொறுப்பில் வினாடியும் நீடிக்க தகுதியற்றவர்.

அரசு நிகழ்வுகளில் தமிழ் தாய் வாழ்த்துப் பாட வேண்டும் என்பது அரசின் சட்டபூர்வ விதிமுறை சார்ந்த மரபாகும். இதனை ஆளுநர் மதிக்காமல், தமிழ் தாய் வாழ்த்துப் பாடலில் "தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்" என்ற வரிகளை நீக்கி பாட வைத்துள்ளார். அரசியலமைப்பு அதிகாரத்தை மதிக்காமல் கூட்டாட்சி கோட்பாடுகளை நிராகரித்து, இந்தி மொழி வெறி குணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆளுநர் ஆர்.என்.ரவியின் நடவடிக்கைகள் தமிழ்நாட்டின் அமைதியை சீர்குலைக்கும் வன்மம் கொண்ட செயலாகும். அதிகார அத்துமீறலை அன்றாட வேலையாக செய்து வரும் ஆளுநர் ஆர்.என்.ரவியின் வாய்க் கொழுப்பு பேச்சையும், செயலையும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிப்பதுடன், அவர் தமிழ்நாட்டு மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும், குடியரசுத் தலைவர் அவரை உடனடியாக ஆளுநர் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு இரா.முத்தரசன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**இந்தித் திணிப்பு: விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தொல்.திருமாவளவன்!**

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அளித்த பேட்டியில் பொதிகை என்கிற ஒரு அடையாளத்தை நாம் பார்க்க முடிந்தது பொதிகை என்கிற பெயரை இப்போது நீக்கி இருக்கிறார்கள் என்பது அதிர்ச்சி அளிக்கிறது அதுமட்டுமல்லாமல் தொடர்ந்தது ஒரு வார காலமாக இந்திநாள் கொண்டாட்டம் ஒளி பரப்பப்படுவதாக அறிந்து அதிர்ச்சி அடைகிறோம். தொலைக்காட்சி மூலமாக இந்தித் திணிப்பு முயற்சியை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வன்மையாக கண்டிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

**மக்கள் நீதி மய்யம்**
**கமல்ஹாசன்!**

மக்கள் நீதி மய்யம் தலைவர் நடிகர் கமல்ஹாசன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை வருமாறு:

திராவிடம் நாடு தழுவியது. தமிழ்த் தாய் வாழ்த்தில் மட்டுமல்ல, தேசிய கீதத்திலும் திராவிடம் இடம்பெற்றிருக்கிறது என குறிப்பிட்டுள்ளார். அரசியல் செய்வதாக நினைத்து "திராவிட நல்திருநாடு" எனும் வார்த்தைகளை விட்டுவிட்டுப் பாடியது தமிழ்நாட்டையும், தமிழக மக்களையும், தமிழக அரசின் சட்டத்தையும், இந்தியாவின் பெருமையாக விளங்கும் உலகின் தொன்மையான தமிழ்மொழியையும் அவமதிக்கும் செயல்.

நீங்கள் வெறுப்பைக் கக்கினால், தமிழ் நெருப்பைக் கக்கும்!

இவ்வாறு மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.